සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

තෙවන වාර පරීක්ෂණය 2020 — 11 ශ්‍රේණිය
மூன்றாம் தவணைப் பரீட்சை 2020 — தரம் 11
Third Term Test 2020 — Grade 11

ඉතිහාසය I
வரலாறு I
History I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
*One hour*

**கவனிக்க:**
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.
(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

---

1) கம்பளை இராசதானி முதல் கோட்டை இராசதானி வரலாற்றை கூறும் இரு இலக்கிய மூலாதாரங்களாக அமைவன

i. ராஜாவலிய, தீபவம்சம்
ii. ராஜாவலிய ,நிகாய சங்கிரஹய
iii. குத்திகலகாவியம், ராஜாவலிய
iv. நிகாய சங்கிரஹய, பூஜாவலிய

2) பனாக்கடுவ செப்புசாசனம் எம்மன்னனின் ஆட்சிக்காலத்தைப் பற்றி குறிப்பிடுகின்றது

i. முதலாம் விஜயபாகு ii. நிஸ்ஸங்கமல்லன் iii. வசபன் iv. 2ம் பராக்கிரமபாகு

3) வரலாற்றுக்கு முற்பட்ட கால மிகப்பழமையான தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப்பெற்ற இடம்

i. பாகியன்கல ii. குருவிட்ட பட்டதொம்பலென iii. கிதுள்கல பெலிலென iv. பொதான

4) முன்வரலாற்று காலத்தில் பெண்கள் கண்களுக்கு மையிடப் பயன்படுத்திய உலோகக்குச்சி கண்டுபிடிக்கப்பட்ட இடம்

i. உடரஞ்சாமடம ii. ஹல்துமுல்ல iii. தோணிகல iv. பெரகல

5) கிராமம், புரம் இரண்டுக்கும் இடைப்பட்ட குடியிருப்பு வகை புராதன கல்வெட்டுக்களில் எப்பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது

i. நுருபுரம் ii. ஒலகம் iii. நகரம் iv. பட்டானகம்

- கீழே தரப்பட்டுள்ள தகவல்களை பயன்படுத்தி 6,7ஆம் வினாக்களுக்கு விடையளிக்க

A. சிவ, சுமன ஆகிய இருவரும் கற்குகை ஒன்றை சுத்தம் செய்து தானமளித்தல்
B. வெள்ளரசு மரக்கிளை நடப்படும் வைபவத்திற்கு சத்ரியர்கள் அழைக்கப்படல்
C. கிராமக் குடியானவன் ஒருவன் அடுத்த போகத்தில் தருவதாக கூறி நெல் மூடை ஒன்றை கடனாகப் பெற்றமை
D. இந்து சமுத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு விருத்தியடைந்த சர்வதேச வர்த்தக தொடர்புகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல்
E. பிராந்திய ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அப்பிரதேசங்களை கைப்பற்றி ஆட்சியை பெற்றுக்கொண்டமை

6) “கமிக” என்பவருடன் தொடர்புடைய இரு கூற்றுக்களாக அமைவன

i. A, B　　ii. A, C　　iii. D, E　　iv. D, B

7) தேவநம்பியதீச மன்னனின் ஆட்சிக்காலத்துடன் தொடர்புடைய நிகழ்வுகளை மாத்திரம் காட்டும் விடையாக அமைவது

i. A, C　　ii. B, C　　iii. B, D　　iv. D, E

8) முதலாம் விஜயபாகு மன்னன் தொடர்பில் பொருத்தமற்ற கூற்றாக அமைவது

i. இளமைக் காலத்தில் கீர்த்தி என அழைக்கப்பட்டமை
ii. புத்தநாயக்க எனும் அரச அதிகாரியின் அடைக்கலம் கிடைக்கப்பெற்றமை
iii. பொலன்னறுவையை ஆட்சி பீடமாக தெரிவு செய்தமை
iv. மகாதித்த துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டமை

9) வைத்திய துறையின் வளர்ச்சியின் பொருட்டு சேவையாற்றிய ஆட்சியாளர்கள் சிலர் நிரல் I இலும் அவர்களால் ஆற்றப்பட்ட சேவைகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. அவற்றை பொருத்தமான ஒன்றுடன் ஒன்று தொடர்பு படுத்தும்போது பெறப்படும் விடையாக அமைவது

| நிரல் I | நிரல் II |
|---|---|
| i. புத்ததாச மன்னன் | A. பசவந்தி நாமசாலாவை நிர்மாணித்தல் |
| ii. ஐந்தாம் மகிந்தன் | B. உபாசக்க ரோகநாச எனும் வைத்திய சாலையை நிர்மாணித்தல் |
| iii. நான்காம் காசியப்பன் | C. வைத்தியசாலை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் |
| iv. முதலாம் உபதிஸ்ஸன் | D. நாடு பூராகவும் வைத்திய சாலைகளை நிர்மாணித்தல் |

i. ABCD　　ii. BCAD　　iii. CDBA　　iv. DCBA

10) இந்நாட்டில் துறைமுகத்தை அண்டி வாழ்ந்த தமிழர்களின் வணக்க வழிபாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட கோயில்

i. திருக்கேதீச்சரம் கோயில்　　ii. நல்லூர் கோயில்
iii. கதிர்காமக் கோயில்　　iv. முன்னேஸ்வரம் கோயில்

11) தென்னிந்திய கூலிப்படையினரின் உதவியைப் பெற்ற இலங்கை ஆட்சியாளன்

i. முதலாம் விஜயபாகு　　ii. இளநாக மன்னன்
iii. தாதுசேனன்　　iv. வலகம்பா

12) “எலகர கால்வாய்” மூலம் நீரைப்பெற்றுக்கொள்ளும் குளங்களுள் ஒன்று அல்லாதது

i. மின்னேரியா குளம்　　ii. கவுடுலு குளம்
iii. நாச்சதுவ குளம்　　iv. கிரிதலைக் குளம்

- கீழுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 13,14 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க

A. பரமானு　　b. பேல்ல　　C. குருணி　　D. லிக்க　　E. அங்குலம்

13) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு அமைய நீளத்தை அளத்தல் தொடர்பான அளவை முறைகளாக அமைவது

i. A C　　ii. A D　　iii. B C　　iv. C E

14) மேலே தரப்பட்டுள்ளவற்றுள் நில அளவீடு தொடர்பாக பயன்படுத்தப்படும் அளவீட்டு முறைகளாவன

i. A B ii. B C iii. B D iv. C E

15) வரலாற்றுக்கால சமுதாய அமைப்புடன் தொடர்புடைய மிகச்சரியான கூற்றாக அமைவது

i. செல்வந்தர்கள், வைத்தியர்கள் சமூகத்தில் நான்காம் வகுப்பினருள் உள்ளடங்கினர்
ii. ''குடின்'' எனும் குடிமக்கஞூடாக கிராமத்தவர்களின் பிரச்சினைகள் அரசனுக்கு அறிவிக்கப்பட்டது
iii. பிக்குமார்கள் சமூகத்தில் மூன்றாம் வகுப்பினருள் உள்ளடங்கினர்
iv. அமைச்சர், சேனாதிபதிகள், பொருளாளர் என்போர் சம அதிகாரமுடையோராய் இருந்தனர்

16) பிக்கு ஒருவருக்கு உணவிற்கு பின் சிற்றுண்டியாக எள்ளு வழங்கப்பட்டது தொடர்பாக கூறும் கல்வெட்டு

i. கொக் அபே கல்வெட்டு ii. களுதிய பொகுன கல்வெட்டு
iii. சித்துல் பவ்வ கல்வெட்டு iv. தோணிகல கல்வெட்டு

- கீழேயுள்ள அட்டவணையில் A முதல் I வரை தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 17, 18 ஆம் வினாக்களுக்கு விடை தருக

| | | |
|---|---|---|
| A. 1215 | D. கம்பளை | G. கலிங்க மாகனின் படையெடுப்பு |
| B. 1236 | E. பொலன்னறுவை | H. தளபதி செங்கோவின் வருகை |
| C. 1405 | F. தம்பதெனிய | I. 2ம் பராக்கிரமபாகு ஆட்சிபீடமேறுதல் |

17) தம்பதெனிய இராசதானியுடன் தொடர்புடைய நிகழ்வொன்றினை காட்டும் விடைத்தொகுதி

i. A F H ii. B F H iii. B F I iv. F D I

18) கம்பளை இராசதானியுடன் தொடர்புடைய நிகழ்வொன்றினை காட்டும் விடைத்தொகுதி

i. C D H ii. B D I III. A D G iv. C D G

19) செனரத் மன்னன் கண்டி இராசதானியை மூன்று பகுதிகளாக பிரித்து தனது மகன் மார்களுக்கு வழங்கியபோது மாத்தளை பிரதேசத்தின் ஆட்சிப்பொருப்பு யாருக்கு வழங்கப்பட்டது

i. விஜேபால இளவரசன் ii. இராஜசிங்க இளவரசன்
iii. குமாரசிங்க இளவரசன் iv. கோணப்பு பண்டார இளவரசன்

20) கண்டி இராச்சியத்தின் நிர்வாக கட்டமைப்பில் ரட்ட எனும் நிர்வாக அலகுடன் தொடர்புடைய அதிகாரி அல்லாதவர்

i. ரட்டே மஹுத்தயா ii. முகாந்திரம்
iii. லியனரால iv. உண்டியரால

21) இலங்கையின் கரையோர பிரதேசங்களில் போர்த்துக்கேயரின் ஆட்சி தொடர்பான பொருத்தமான விடைத்தொகுதியாக அமைவது

| | |
|---|---|
| 1. பிரான்சிஸ்கோ டி அல்மேடா | A. தந்துரே போர் |
| 2. லோரன்ஸோ டி அல்மேடா | B. 1505 ல் இலங்கை வருகை |
| 3. பிலிப் த ஒலிவேரா | C. இலங்கையை கண்டு பிடிக்க உத்தரவு வழங்கப்பட்டமை |
| 4. பெரோ லோபஸ் த சூசா | D. யாழ்ப்பாணத்தை கைப்பற்றல் |

i. ACBD ii. BADC iii. CBDA iv. DBAC

22) இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சி தொடர்பில் சரியான தகவல்கள் அடங்கிய விடைத்தொகுதி

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1.ஜோரிஸ்வான் ஸ்பில் பேர்ஜன் | A.இரண்டாம் இராஜசிங்கனுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளல் |
| 2. சி பெல் த வாட் | B.கண்டி இராசதானிக்கு வந்த இரண்டாவது ஒல்லாந்து தூதுவன் |
| 3. வெஸ்டர் வோல்ட் | C.6 படையணியுடன் கண்டியை ஆக்கிரமித்தல் |
| 4. பெரன் வான் ஏக் | D.முதலாம் விமலதர்மசூரியனை சந்தித்தல் |

i. ACBD ii. BDCA iii. CDBA iv. DBAC

23) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியை நிலைநாட்டுதல் தொடர்பாக நான்கு சோடி நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன, அவற்றுள் பொருத்தமற்ற சோடியாக அமைவது

i. ரொபட் அன்ரூஸ் - இராஜாதி இராஜசிங்கனை சந்தித்தல்
ii. தோமஸ் மெயிட்லண்ட் - தளபதி மெக்டோவலை கண்டிக்கு அனுப்புதல்
iii. ரொபட் பிரவுண்றிக் - 1818 ம் ஆண்டு கண்டி பிரகடனத்தை வெளியிடல்
iv. ஆளுநர் டொரிங்டன் - புதிய வரி சீர்திருத்தத்தை கொண்டு வரல்

24) கீழே தரப்பட்டுள்ள விடயங்களுள் பௌத்த மறுமலர்ச்சி இயக்கம் தொடர்பில் ஹென்றிஸ்டில் ஒல்கொட் அவர்களின் சேவைகளை மாத்திரம் உள்ளடக்கும் விடையாக அமைவது

A. ஐம்பெரும் விவாதங்களில் பங்கு கொள்ளல்
B. பௌத்த பாடசாலை நிதியம் ஒன்றை ஆரம்பித்தல்
C. ருவன்வெளிசாயவின் புனர்நிர்மாண சேவைகளில் பங்குகொள்ளல்
D. வெசாக் போயா தினத்தை அரச விடுமுறையாக்கியமை

i. A C ii. B C iii. B D iv. A D

- கீழே A B C D என கருத்துச்சோடிகள் தரப்பட்டுள்ளன. சோடி ஒன்றில் காட்டப்பட்டுள்ள முதலாம் இரண்டாம் கருத்துக்களிடையேயான தொடர்பினை பரிசீலனை செய்து 25 தொடக்கம் 28 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - இலங்கை தேசிய சங்கம்
மனிங் டெவன்சியர் சீர்த்திருத்தம்

B - 1912 மதுவரிச்சட்டம்
மத்திய தர வர்க்கத்தினரும், இலங்கை தேசிய சமய மறுமலர்ச்சி தலைவர்களும் இணைந்து செயற்பட்டமை

C - சம்பளத்திற்கு வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் தோன்றியமை
கட்டாய சேவை இராஜகாரிய முறை

D. - பழைய பிரபுத்துவ வகுப்பினர்
புதிய மத்தியதர வகுப்பினர்

25) முதலாவது வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இரண்டாவது தோற்றம் பெற்றதை காட்டும் சோடி

i. A ii. B iii. C iv. D

26) இரண்டாவதன் வெற்றிக்கு முதலாவது செயற்பாடு காரணமாக அமையும் சோடி

**i. A ii. B iii. C iv. D**

27) இரண்டாவது வீழ்ச்சியடைந்ததன் காரணமாக முதலாவது தோற்றம் பெற்றதை காட்டும் சோடி

i. A ii. B iii. C iv. D

28) முதலாவதற்கும் இரண்டாவதற்கும் இடையே தொடர்பினை காட்டாத சோடி

i. A ii. B iii. C iv. D

29) 1956 இல் பிரதமர் S.W.R.D. பண்டாரநாயக்க அவர்களின் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்த்திருத்தங்களுள் ஒன்று

i. துறைமுகம், போக்குவரத்து, பேருந்துகளை அரசுடமையாக்கல்
ii. பிரித்தானிய பேரரசுடன் கொண்டிருந்த யாப்பு ரீதியான தொடர்பினை முடிவுக்கு கொண்டுவரல்
iii. இலங்கை “ஸ்ரீ லங்கா” என அழைக்கப்படல்
iv. இலங்கையை ஒன்றுபட்ட குடியரசாக்குதல்

30) மகாவலி அபிவிருத்தி திட்டம் தொடர்பான சரியான கூற்றுக்களை உள்ளடக்கிய விடைத்தொகுதி

A. வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு

B. உலர் வலயத்தின் புராதன குளங்கள் மற்றும் நீர்ப்பாசன புனரமைப்புக்களை மேற்கொண்டு அவற்றை விவசாயத்திற்கு பயன்படுத்தல்

C. ஈரவலயத்தில் காணப்படும் நிலப்பற்றாக்குறைக்கு தீர்வு காணல்

D. உலர் வலய விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீர் வசதிகளை வழங்கள்

ii. A B ii. A D iii. B D iv. B C

31) மறுமலர்ச்சி காலத்தில் இத்தாலியில் தோற்றம் பெற்ற பிரபல எழுத்தாளர்களை கொண்ட விடைத்தொகுதி

i. தாந்தே, பெட்ராக், இராஸ்மஸ்
ii. தோமஸ்மூர், தாந்தே, பெட்ராக்
iii. பெட்ராக், ஷேக்ஸ்பியர், இராஸ்மஸ்
iv. தாந்தே, பெட்ராக், பொக்காஷியோ

32) மறுமலர்ச்சி காலத்தில் ஏற்பட்ட நாடுகான் பயணங்களின் விளைவாக நாடுகள் மற்றும் பிரதேசங்களை கண்டுபிடித்த ஸ்பானிய நாட்டவர் இருவரை உள்ளடக்கிய விடைத்தொகுதி

A. வாஸ்கொடகாம
B. கிறிஸ்டோபர் கொலம்பஸ்
C. பேடினண்ட் மகலன்
D. பார்த்தலோமியோ டயஸ்

i. A B ii. B D iii. B C iv. C D

- கீழே தரப்பட்டுள்ள A, B எனும் தகவல்களை கருத்தில் கொண்டு 33, 34 ம் வினாக்களுக்கு விடை தருக

A. சுயதேவை பூர்த்தி பொருளாதாரம் வீழ்ச்சி கண்டமை
B. நகரமயமாக்கள் துரிதமடைந்தமை

33) கைத்தொழில் புரட்சி பொருளாதார துறையில் ஏற்படுத்திய மாற்றம் தொடர்பில்

i. A யும் B யும் உண்மையானது
ii. A யும் B யும் தவறானது
iii. A உண்மையானது B தவறானது
iv. A. தவறானது B உண்மையானது

34) கைத்தொழில் புரட்சி சமுதாய துறையில் ஏற்படுத்திய மாற்றம் தொடர்பில்

i. A யும் B யும் உண்மையானது
ii. A யும் B யும் தவறானது
iii. A உண்மையானது B தவறானது
iv. A. தவறானது B உண்மையானது

35) 1844 இல் இரு இடங்களை மின்கம்பி ஒன்றின் மூலம் இணைத்து அதன் மூலம் செய்திகள் பரிமாறும் தந்தி முறையை கண்டு பிடித்தவர்

i. சாமுவேல் மோஸ் ii. ரொபட் புல்ட்டன் iii. மார்க்கோணி iv. ஹென்றி பெல்

- கீழே A முதல் F வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களை பயன்படுத்தி 36 முதல் 38 வரையான வினாக்களுக்கு விடையளிக்க

A. உற்பத்தி செயற்பாடுகள் அல்லது வர்த்தகம் தொடர்பாக தாய் நாட்டுடன் போட்டியிட முடியாது
B. பொதுமக்களுக்கும் அரசனுக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்தல்
C. பிலடெல்பியா நகரில் மகாநாடு இடம்பெற்றமை
D. சார் மன்னர்களின் ஆட்சி வீழ்ச்சியடைந்தமை
E. மொண்டஸ்கியூ, வோல்டயர், ரூசோ ஆகியோரின் கருத்துக்கள்
F. சமவுடமைக் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட நாடொன்று உருவாதல்

36) அமெரிக்க சுதந்திர போருடன் தொடர்புடைய சரியான தகவல்களை உள்ளடக்கிய விடைத்தொகுதி

i. A, C ii. B, D iii. C, D iv. D, F

37) பிரான்சிய புரட்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகளை மாத்திரம் உள்ளடக்கிய விடைத்தொகுதி

i. A, B ii. B, E iii. C, E iv. E, F

38) ரஷ்ய புரட்சியின் விளைவுகளை காட்டும் விடைத்தொகுதி

i. A, C ii. B, C iii. D, F iv. E, F

39) முதலாம் உலகப்போரின் போது மத்திய ஐரோப்பிய வல்லரசு அணியை பிரதிநிதித்துவப்படுத்திய நாடுகளை கொண்ட விடைத்தொகுதி

i. இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி ii. இத்தாலி, ஜேர்மனி, சேர்பியா
iii. பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்திரியா iv. ஜேர்மனி, இத்தாலி, ஆஸ்திரியா

40) ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நீதிமன்றமான சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ளது

i. ஹேக் நகர் ii. ஜெனீவா iii. நிவ்யோர்க் iv. இலண்டன்